بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *17/04/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றின் ஒளியில் அன்னாருடைய உண்மைத்தன்மை குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

قُلْ لَّوْ شَآءَ اللّٰهُ مَا تَلَوْتُهٗ عَلَيْكُمْ وَلَآ اَدْرٰىكُمْ بِهٖ ۖ فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا مِّنْ قَبْلِهٖ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿۱۷﴾

فَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا اَوْ كَذَّبَ بِاٰيٰتِهٖ ؕ اِنَّهٗ لَا يُفْلِحُ الْمُجْرِمُوْنَ ﴿۱۸﴾

இந்த வசனங்களின் மொழியாக்கம்: "நீர் கூறுவீராக! இதற்குப் பதிலாக வேறெதாவது போதிக்க அல்லாஹ் நாடியிருந்தால் இதனை நான் உங்களுக்கு முன் ஓதிக்காட்டியிருக்க மாட்டேன்; அவன் இதனை உங்களுக்கு அறிவித்திருக்கவும் மாட்டான். இதற்கு முன்னர் நான் உங்களிடையே நீண்ட காலம் வாழ்ந்துள்ளேன். அவ்வாறிருந்தும், நீங்கள் அறிவு கொண்டு சிந்திக்க மாட்டீர்களா? அல்லாஹ்வின் மீது பொய்யுரைப்பவனை விடவும் அல்லது அவனது அடையாளங்களைப் பொய்யாக்குபவனை விடவும் மிகப் பெரும் அநியாயக்காரன் யார்? நிச்சயமாகக் குற்றவாளிகள் வெற்றி பெற மாட்டார்கள்." (திருக்குர்ஆன் 10: 17,18)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது. **இன்று அன்னாருடைய உண்மை, வாய்மை மற்றும் நேர்மை ஆகிய பண்புகள் குறித்து எடுத்துரைக்கப்படும்.**

அன்னாரது வாழ்க்கைச் சம்பவத்தில் அன்னாருடைய உண்மைத்தன்மைக்கான மிக உயர்ந்த உதாரணங்கள் காணக் கிடைக்கின்றன. எதிரிகள் கூட அன்னாருடைய உண்மைத்தன்மையின் உயர்தரத்தை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை ஒப்புக்கொண்டவர்களுக்கும், "உண்மையின் மிக உயர்ந்த தரங்களை நிலைநாட்டுங்கள்" என்றே அறிவுறுத்தினார்கள். எனவே, இன்று இது தொடர்பாக நாம் அனைவரும் நம்மைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். உண்மையின் இந்த உயர்ந்த தரங்கள்தான் நமது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் வெற்றிக்கான உத்தரவாதமாகவும், அதேபோல் நமக்குத் தப்லீக் செய்வதற்கான வாசல்களைத் திறப்பதாகவும் அமையும்.

**ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை குறித்து எடுத்துரைக்கும்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்**: “ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி நாம் பார்க்கும்போது, அன்னாருடைய எதிரிகளே அன்னாரை ஸாதிக் (உண்மையாளர்) என்றும் அமீன் (நம்பிக்கையாளர்) என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள் அன்னார் மீது எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்தவில்லை.

எதிரிகள் கூட அன்னாருடைய உண்மை மற்றும் தூய்மைக்குச் சாட்சியம் அளித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்த விஷயம் எதிரிகளிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது? ஆரம்பத்தில் அவர்கள் திருக்குர்ஆனால் ஈர்க்கப்படவில்லை; மாறாக, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் ஆரம்பகால வாழ்க்கைதான் அவர்களை ஈர்த்தது. அன்னார் அவர்களிடையே வாழ்ந்தார்கள். அன்னாருடைய நேர்மை, உண்மை, படைப்பினங்கள் மீதான அன்பு மற்றும் தியாகம் ஆகியவையே அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. நபித்துவப் பிரகடனத்திற்கு முன்பு அன்னார் அம்மக்களை ஷிர்க்கை விட்டுத் தடுத்திருக்கவில்லை. ஏனெனில் அப்போது இறைக்கட்டளை வரவில்லை. ஆனால், அன்னார் ஒருபோதும் முஷ்ரிக்காக (இணை வைப்பவராக) இருந்ததில்லை. அன்னாருடைய உயர்ந்த ஒழுக்கமே மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்தத் தாக்கம் மெல்ல மெல்ல அவர்கள் மனதிற்குள் ஊடுருவியது."

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "அல்லாஹ், நமது தலைவரும் எஜமானரும் இறை அச்சமுடையவர்களின் தலைவரும் இறுதி கால நபியுமான (ஸல்) அவர்களுக்கு பல்வேறு விதமான உதவிகளைக் கொண்டு வெற்றியையும் ஆதரவையும் அளித்தான். ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் மூஸா(அலை) மற்றும் ஹஸ்ரத் ஈஸா(அலை) அவர்களைப் போன்றே அன்னாருக்கும் ஹிஜ்ரத் செய்யும் நிலை ஏற்பட்டது. இருப்பினும், அந்த ஹிஜ்ரத் தனக்குள்ளேயே வெற்றி மற்றும் உதவியின் அடித்தளத்தைக் கொண்டிருந்தது. எனவே, நண்பர்களே! இறையச்சமுடையவர் ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை என்பதை உறுதியாகத் தெரிந்துகொள்ளுங்கள். இரு சாரார் ஒருவருக்கொருவர் பகையுணர்வு கொண்டு அந்தப் பகை உச்சக்கட்டத்தை எட்டும்போது, அல்லாஹ்வுடைய பார்வையில் யார் இறையச்சமுடையவராகவும் தீமைகளிலிருந்து விலகியவராகவும் இருக்கிறாரோ அவருக்கு விண்ணிலிருந்து உதவி இறங்குகிறது. இவ்வாறாக வானத்து தீர்ப்பின் மூலம் மார்க்க ரீதியான சச்சரவுகள் ஒரு முடிவுக்கு வருகின்றன."

**அன்னார் மேலும் கூறுகிறார்கள்**: "அல்லாஹ், நமது நபி (ஸல்) அவர்களை விளித்துக் கூறும்போது, وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيۡمٍ நிச்சயமாக நீர் மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர் என்று கூறியுள்ளான். அதாவது அனைத்து வகையான நல்லொழுக்கங்களும்..... உம்மிடம் ஒருங்கே அமைந்துள்ளன. சுருக்கமாகக் கூறின், மனிதனின் உள்ளத்தில் காணப்படும் அனைத்து ஆற்றல்களும்..... அனைத்து இயல்பான நிலைகளும், அறிவு மற்றும் ஆழ்ந்த சிந்தனையின் ஆலோசனையுடன் அந்தந்த இடத்திற்கும் சூழலுக்கும் தகுந்தாற்போல் வெளிப்படுத்தப்படும்போது அவை அனைத்தும் நல்லொழுக்கங்கள் என்று அழைக்கப்படும்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையை பரப்புவதற்காகவே உலகிற்கு வந்தார்கள். எனவே பல்வேறு சந்தர்ப்பங்களில், தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் உண்மையைக் கடைபிடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். **ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "உங்கள் மீது உண்மை கடமையாகிறது; ஏனெனில் உண்மை நன்மையின் பக்கம் அழைத்துச் செல்கிறது. நன்மை சொர்க்கத்தின் பக்கம் அழைத்துச் செல்கிறது. ஒரு மனிதன் தொடர்ந்து உண்மையை பேசி, உண்மையைத் தேடுவதிலேயே ஈடுபட்டிருந்தால் அவர் அல்லாஹ்விடம் ஸித்தீக் (உண்மையாளர்) என்று எழுதப்படுகிறார். நீங்கள் பொய்யை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்; ஏனெனில் பொய் தீமையின் பக்கம் அழைத்துச் செல்கிறது. தீமை (நரக) நெருப்பின் பக்கம் அழைத்துச் செல்கிறது. ஒரு மனிதன்

தொடர்ந்து பொய் பேசிக் கொண்டே செல்லும்போது, அல்லாஹ்விடம் அவன் கஸ்ஸாப் (மிகப் பெரும் பொய்யன்) என்று எழுதப்படுகிறான்."

**மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்**: "நிச்சயமாக பொய், எந்நிலையிலும் அனுமதிக்கத்தக்கது அல்ல; தீவிரமான சூழலில் பேசும்போதும் சரி அல்லது விளையாட்டாகப் பேசும்போதும் சரி, அது கூடாது. அதேபோல் ஒரு நபர் தனது குழந்தையிடம் ஒரு வாக்குறுதி அளித்துவிட்டு அதனை நிறைவேற்றாமல் இருப்பதும் கூடாது."

**அல்லாமா ராஸி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஸூரா தவ்பாவின் 119-வது வசனத்திற்கு விளக்கம் அளிக்கும்போது பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்கள்:** "ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, நான் எனது தீய செயல்களிலிருந்து தப்பிக்க விரும்புகிறேன். ஆனால் என்னிடத்தில் மது அருந்துதல், திருட்டு, விபச்சாரம் மற்றும் பொய் ஆகிய பழக்கங்கள் மிக அதிகமாக உள்ளன. தாங்கள் இவற்றை ஹராம் ஆக்கியதாக மக்கள் கூறுகிறார்கள். இவற்றையெல்லாம் கைவிடுவதற்கு முழுமையான ஆற்றல் எனக்கு இல்லை. இவற்றில் ஒன்றை மட்டும் நான் கைவிடுவதாக தாங்கள் ஏற்றுக் கொண்டால் நான் தங்கள் மீது ஈமான் கொள்வேன் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சரி, நீ பொய் சொல்வதைக் கைவிடு என்று கூறினார்கள். அவரும் பொய் சொல்வதைக் கைவிடுவதாக உறுதிமொழி அளித்து முஸ்லிமானார். பின்னர் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு புறப்பட்டு வெளியே சென்றபோது, அவருக்கு அந்தத் தீமைகள் செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. ஆனால், நான் இத்தீமைகளில் ஈடுபட்டால், பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கேட்கும்போது நான் உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. இவ்வாறாக அவர் அந்த அனைத்துத் தீமைகளிலிருந்தும் விலகிச் சென்றார்."

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நபித்துவப் பிரகடனம் குறித்த செய்தி எட்டியபோது, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, தங்களைப் பற்றி எனக்கு ஒரு செய்தி வந்தடைந்துள்ளது என்று கூறினார்கள். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "அபூபக்ரே! என்னைப் பற்றி உமக்கு என்ன செய்தி வந்தடைந்துள்ளது என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், தாங்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் பக்கம் மக்களை அழைப்பதாகவும், தம்மை இறைத்தூதர் என்று கூறுவதாகவும் எனக்கு செய்தி வந்தடைந்துள்ளது என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! நிச்சயமாக எனது இறைவன் என்னை நற்செய்தி அறிவிப்பவனாகவும் எச்சரிக்கை செய்பவனாகவும் ஆக்கியுள்ளான்; மேலும், என்னை இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆவின் பலனாகவும், அனைத்து மனிதர்களிடமும் தூதராகவும் அனுப்பியுள்ளான் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் பொய் கூறியதாக நான் ஒருபோதும் கண்டதில்லை. தங்களுடைய நேர்மை, உறவினர்களை அரவணைத்தல் மற்றும் நற்செயல்கள் காரணமாக நிச்சயமாக தாங்கள் நபித்துவத்திற்கு அதிக தகுதியானவர். தங்களுடைய கையை நீட்டுங்கள்; நான் தங்களிடம் பைஅத் செய்கிறேன் என்று கூறினார்கள். ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய கையை நீட்டியபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருடைய கையில் பைஅத் செய்தார்கள்.

வஹீ இறங்கத் துவங்கிய கால கட்டத்தில் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேர்மை, உண்மை ஆகியவை குறித்து கூறிய மகத்தான வார்த்தைகள் பற்றி எடுத்துரைத்தவாறு **ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "55 வயதுடைய ஒரு பெண்மணி, அன்னாரது ஊரைச் சேர்ந்தவர், அன்னாரது கோத்திரத்தைச் சேர்ந்தவர், 15 ஆண்டுகளாக அன்னாரது மணவாழ்க்கையில் இருப்பவர் எத்தகைய சாட்சியத்தை அளிக்கிறார் என்று கவனித்துப் பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கவலையிலும் பதற்றத்திலும் இருந்த நேரத்தில் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அளித்த சாட்சியம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இப்பண்புகள் இல்லையென்றால், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் அந்த வார்த்தைகள் அந்நேரத்தில் ஒருபோதும் ஆறுதலைத் தந்திருக்காது."

அபூதாலிப் எனும் பள்ளத்தாக்கில் முடக்கப்பட்டிருந்த நிலையில் மூன்றாவது ஆண்டு நெருங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்றுத் தமது பெரிய தந்தை அபூ தாலிப் அவர்களிடம் ஒரு தகவலைத் தெரிவித்தார்கள். அது என்னவென்றால், பனூ ஹாஷிம் கோத்திரத்தாரை சமூகப் புறக்கணிப்பு செய்வதாகக் கூறி கஃபாவில் தொங்கவிடப்பட்டிருந்த ஒப்பந்தப் பத்திரத்தில் அல்லாஹ் என்ற பெயரைத் தவிர மற்ற அனைத்து வரிகளையும் கரையான் அரித்துவிட்டது என்பதாகும். ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வார்த்தையின் மீது எத்தகைய நம்பிக்கை இருந்ததென்றால், அவர்கள் தமது சகோதரர்களிடம் இதனைத் தெரிவிக்கும்போது, முஹம்மது[ஸல்] இன்றுவரை என்னிடம் பொய் சொன்னதில்லை என்று கூறினார்கள். பின்னர் அவர்கள் தம் சகோதரர்களுடன் குறைஷித் தலைவர்களிடம் சென்று, என் சகோதரனின் மகன் என்னிடம் ஒரு செய்தியைக் கூறியுள்ளார். அவர் என்னிடம் ஒருபோதும் பொய் சொன்னதில்லை. என் சகோதரரின் மகன் கூறுவது உண்மையாக இருந்தால், நீங்கள் உங்கள் சமூகப் புறக்கணிப்பு முடிவைக் கைவிட வேண்டும்; அவர் கூறுவது பொய்யாக இருந்தால் நான் அவரை உங்களிடம் ஒப்படைத்துவிடுகிறேன். நீங்கள் அவரை கொன்றாலும் சரி; உயிருடன் வைத்திருந்தாலும் சரி என்றார்கள். அந்த ஒப்பந்தப் பத்திரத்தைப் பார்த்தபோது, ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியவாறே அது இருந்தது. இதனால் குறைஷியர்கள் தங்கள் மக்கள் முன்னிலையில் வெட்கித் தலைகுனிந்தனர்.

அபூ ஜஹ்ல், ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எத்தகைய பெரிய எதிரியாக இருந்தான்! **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "அபூ ஜஹ்ல் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நாங்கள் உம்மைப் பொய்யர் என்று கூறவில்லை; நீர் முன்வைக்கும் இந்தப் போதனையைத்தான் நாங்கள் பொய் எனக் கூறுகிறோம் என்றான்." அதாவது, அபூ ஜஹ்ல் போன்ற ஒரு கடும் எதிரியுடைய, கருப்பு உள்ளம் கொண்ட மனிதன் கூட ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பொய்யர் என்று அழைக்கத் தயாராக இருக்கவில்லை.

**உமையா இப்னு கலஃப் என்பவனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மிகக் கடும் எதிரியாக இருந்தான். ஆனால், ஒரு சந்தர்ப்பத்தில்**, அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது[ஸல்] பேசும்போது உண்மையைத்தான் பேசுகிறார்; அவர் பொய் சொல்வதில்லை என்ற சொற்கள் அவனது நாவிலிருந்தும் வெளிப்பட்டன.

மந்திரம் என்பது தலைக்கு மேல் ஏறிப் பேச வேண்டும் என்பார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மந்திரம் எத்தகைய பெரிய மந்திரமாக இருந்தது என்றால், அன்னார் தம் எதிரிகளின் நாவிலிருந்தும் தமது உண்மை மற்றும் நேர்மைக்குச் சாட்சியத்தைப் பெற்று விட்டார்கள்.

**மதீனாவின் யூதர்களிடமிருந்தும் இத்தகைய சாட்சியங்கள் காணக் கிடைக்கின்றன.** முஸ்லிம்களுக்கும் பனூ குறைஸா என்ற யூதக் கோத்திரத்திற்கும் இடையே பரஸ்பர ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்று இருந்தது. அகழ்ப் போரின் போது, பனூ நளீர் கோத்திரத்தின் தலைவன் ஹுயை பின் அக்தப், பனூ குறைஸா கோத்திரத்தின் தலைவன் கஅப் பின் அஸதிடம் சென்று, முஸ்லிம்களைத் தோற்கடிப்பதற்காக அவர்களுடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு குறைஷிகளுக்கு உதவுமாறு தூண்டினான். அந்த நேரத்தில், பனூ குறைஸாவின் தலைவனாகவும் முஸ்லிம்களின் எதிரியாகவும் இருந்த கஅப் பின் அஸத், நான் முஹம்மது(ஸல்) -வுடன் ஒப்பந்தம் செய்துள்ளேன். நான் ஒருபோதும் அந்த ஒப்பந்தத்தை முறிக்க மாட்டேன். நான் அவரிடமிருந்து நன்றியுணர்வு மற்றும் உண்மையைத் தவிர வேறொன்றையும் கண்டதில்லை என்று கூறினான்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "நான் நகைச்சுவையாகப் பேசினாலும் அதிலும் உண்மையை மட்டுமே பேசுவேன்" என்று கூறினார்கள். அதேபோல் இன்னொரு சந்தர்ப்பத்தில், "யாராவது மக்களைச் சிரிக்க வைப்பதற்காகப் பொய் பேசினால் அவருக்கு அழிவுதான்!" என்றும் அன்னார் கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "உண்மைத்தன்மையைப் பொறுத்தவரை ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தனிப்பட்ட அந்தஸ்து எவ்வளவு உயர்ந்ததாக இருந்தது என்றால், அன்னாருடைய சமுதாயமே அன்னாருக்கு ஸித்தீக் (உண்மையாளர்) என்று பெயரிட்டிருந்தது. அன்னார் தமது ஜமாஅத்திற்கும் எப்போதும் உண்மையில் நிலைத்திருக்குமாறு அறிவுறுத்தி வந்தார்கள். உண்மைதான் நன்மையின் பக்கம் கவனம் செலுத்தத் தூண்டுகிறது. நன்மைதான் மனிதனுக்குச் சொர்க்கத்தைப் பெற்றுத் தருகிறது. உண்மையின் அசல் நிலை என்னவென்றால், ஒரு மனிதன் தொடர்ந்து உண்மையை பேசிக் கொண்டே இருக்க வேண்டும். எந்த அளவுக்கென்றால், இறுதியில் அவன் அல்லாஹ்வின் முன்னிலையிலும் உண்மையாளராகக் கருதப்பட வேண்டும் என்று அன்னார் அடிக்கடி கூறி வந்தார்கள்."

இன்று ஒவ்வோர் அஹ்மதியும் தமது உண்மையின் தரம் எவ்வாறு உள்ளது என்பது குறித்து தம்மைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்; தம்மிடம் உள்ள பலவீனங்களை நீக்க வேண்டும்.

***குத்பாவின் இறுதியில், மிர்ஸா நஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய ஷாஹிதா அஹ்மத் ஸாஹிபா அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக ஹுஸூர் அவர்கள் அறிவித்தார்கள்.***

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)